

# முக்கியமானவை சுருக்கமாக

## மொத்த செலவீன பங்களிப்பு தொகை

கூட்டு வேலை உடன்படிக்கை (GAV) வேலைபெறுநருக்கு துப்பரவு தொழில்சார் மேலதிக பாடநெறியை கற்கவும், வேலைசார் சலுகைகள், சம்பள கொடுப்பனவு சிறந்த முறையில் முன்னேற்றம் காணவும் ஊக்கமளிக்கின்றது. இதனை அடைய மொத்த செலவீட்டு பங்களிப்பு தொகையிலிருந்து முக்கியமாக தொழில்சார் நெறிபாடத்திட்டத்திற்கும், நிறுவனங்களை பரிசோதனை செய்யவும் நிதி செலவிடப்படுகின்றது. இந்நிதி வேலை செய்பவர்களிடமிருந்து சம்பளத்தில் 0.4%, வேலைதருநர் இடமிருந்து 0.2% என கட்டணமாக அறவிடப்படுகின்றது. தொழிற்கல்வி கற்பவர்கள் மாதத்திற்கு 1/= Fr. கட்டணமாக செலுத்த வேண்டும். நீங்கள் Unia அங்கத்தவராக இருக்கும் பட்சத்தில் கட்டிய தொகையை மீளப்பெற்றுக்கொள்ளலாம்.

உங்களுக்குரிய மொத்த செலவீன பங்களிப்பு தொகை மீள் வழங்கப்படும். Unia அலுவலகத்தை நாடவும்

## மேலதிக தொழிற்கல்வி மூலம் கூடிய சம்பள உயர்வு

துப்பரவு பணியில் ஈடுபடும் நிறுவனங்களின் ஒப்பந்த பங்குதாரர் தேர்ச்சி பெறாத துப்பரவு பணியாளர்களுக்காக 80 மணித்தியால இலவச தொழிற்கல்வியை பெற்றுக்கொள்ள வழிவகுத்துள்ளார்கள். இந்த GAV பாடநெறியை கற்றுமுடித்தவர்களுக்கு கூடிய சம்பளம் வழங்கப்படும். (சாதாரண துப்பரவாக்கல் வேலை ஐஐ, விசேட துப்பரவாக்கல் வேலை ஐஐ, வாகனங்களை சுத்திகரிக்கும் வேலை ஐஐ) என்ற அடிப்படையின் படி மேலதிக சம்பள உயர்வு வழங்கப்படும். டொச்மொழியை சரளமாக கதைக்க அந்த மொழியின் அவசியம் வேலை நிறுவனங்களில் முக்கியத்துவம் பெறுகின்றது. ஒப்பந்த பங்குதாரர் துப்பரவு பணியாளர்களுக்குரிய டொச் கல்வியை ஏற்பாடு செய்து வழங்குகிறார்கள். ருயைவின் உறுப்பினர்கள் இதனை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக தகவல் தேவைப்படின் அல்லது பாடநெறியை கற்க விரும்பினால் அருகில் உள்ள Unia அலுவலகத்தை நாடவும்.

## வேலை நேர கணிப்பு

துப்பரவுத்துறையில் துரதிருஷ்டவசமாக அடிக்கடி ஏற்படுகின்ற முறைகேடு யாதெனில், வேலைதருநர் நீங்கள் பணியாற்றிய வேலை நேரங்களை சரியாக கணிப்பிடாமல் சம்பள கணக்கை பார்ப்பது. சட்டரீதியாக தெளிவான விடையம் ஏதெனில் எவ்வளவு நேரம் வேலை செய்கின்றீர்களோ அதற்கான ஊதியம் வழங்கப்பட வேண்டும். உங்கள் நிறுவனம் அதனை மேற்கொள்ள கடமைப்பட்டுள்ளது. கீழ்வரும் தரவுகள் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

- நீங்கள் வேலை செய்யும் இடம் அல்லது தளப்பிரிவு
- வேலையின் ஆரம்பம், முடிவு நேரங்கள் (போக்குவரத்து நேரங்களை பொறுத்து)
- சம்பளமற்ற இடைஓய்வு நேரம்

நீங்கள் வேலை செய்த நேரங்களை எந்நேரமும் கணிப்பிட்டு பரிசோதனை செய்ய உங்களுக்கு உரிமை உண்டு. சரியான வேலை நேர கணிப்பீடுகள் இருந்தால் மட்டும் அதனை ஆதரித்து கையெழுத்து வைக்கலாம். நீங்கள் வேலை செய்த நேர கணிப்பீட்டை ஒவ்வொரு நாளும் சுயமாக எழுதி வைத்து கணிப்பிடவும்.


நீங்கள் பணியாற்றும் நிறுவனம் உங்கள் வேலை நேரங்களை கணிப்பிடாமல் அல்லது பிழையாக கணிப்பிட்டிருந்தால் Unia அலுவலகத்தை நாடி ஆலோசனையை பெற்றுக்கொள்ளலாம்.

11/2023

# Unia என்றால் யார்?

சுவிட்சலாந்தில் சுமார் 180 000 அங்கத்தவர்களை தன்னகத்தே கொண்ட, அவர்களின் நலன் சார்பாக ஆர்வத்துடன் சேவை புரியும் மிகப் பெரிய தொழிற்சங்கம் Unia ஆகும்.இது கூட்டுவேலை உடன்படிக்கைகளை வேலைதருநருடன் கைச்சாத்திடுவது மட்டுமல்லாமல் சிறந்த சம்பளம், வேலைச்சலுகைகள், வெவ்வேறு துறைகளில் காணப்படும் சமூகநலன்சார் விடையங்களில் கவனம் செலுத்துதல் என்பனவற்றை கருத்தில் கொண்டு செயல்படுகின்றது. நாம் எமது அங்கத்தவர்களுக்கு பல தரப்பட்ட சேவைகளை வழங்கி வருகிறோம். வேலைத்தளங்களில் ஏற்படும் பிணக்குகளுக்கு உதவி வருகிறோம். Uniaவின் சட்டமையம் தனது அங்கத்தவர்களுக்கு வேலைதருநருடன் வழமைக்கு மாறான பிரச்சனைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மட்டுமல்லாது சமூகநல காப்புறுதிகளில் ஒழுங்கான முறையில் செயற்படாத பட்சங்களிலும் தேவைப்பட்டால் நீதிமன்றம் வரை சென்று வாதிட தயங்காது. மேலதிக கல்வி (Weiterbildung) செலவில் குறிப்பிட்ட தொகையை Unia தனது அங்கத்தவர்களுக்கு மீள வழங்கும். அத்துடன் பல வியாபார நிறுவனங்களில் கழிவு விலை அடிப்படையில் கொள்வனவு மேற்கொள்ளல், அதனைவிட விடுமுறைக்குரிய கழிவு, Reka-Checks, பாதுகாப்பு உரிமைக்காப்புறுதியில் விலைக்கழிவு போன்ற சலுகைகளையும் வழங்குகிறது.
சுவிஸின் சகல பிரதேசங்களிலும் ருயைய செயற்படுகிறது. எமது பணியாளர்கள் பல்வேறு மொழிகளில் உங்களுக்கு ஆலோசனை வழங்க காத்திருக்கிறார்கள்.

சிறந்த வேலை நிலைமைகளுக்காக எங்களுடன் போராடுங்கள்!
இப்போது ருயைய உறுப்பினராகுங்கள்



# ஒன்றாக நாங்கள் பலமாக இருக்கிறோம்!

சுவிட்சர்லாந்தின் ஜெர்மன் மொழி பேசும் பகுதியில் உள்ள துப்புரவுத் தொழிலின் புயுஏ பற்றிய கூடுதல் தகவலைப் பெற விரும்புகிறீர்களா?
அல்லது வேறு ஏதேனும் கேள்வி உள்ளதா?

இணையதளத்தில் கூடுதல் தகவல்களைக் காணலாம்:
**www.unia.ch/reinigung**

அல்லது உங்கள் பகுதியில் உள்ள ருயைய செயலகத்தை தொடர்பு கொள்ளவும்.



# வேலைசார் கூட்டு உடன்படிக்கை துப்பரவுத்துறை 2022–2025

டொச் மொழி பேசும் பகுதிகளில் உள்ள துப்பரவுப்பணியார்களுக்கான சிறந்த வேலை நிபந்தனைகள்

UNIA

# வேலைசார் கூட்டு உடன்படிக்கை 2022–2025

துப்பரவு துறைக்கான கூட்டுவேலை உடன்படிக்கையானது (GAV) தொழில்தருநருக்கும், தொழிற்சங்கத்தினருக்குமான பேச்சுவார்த்தை மூலம் கூட்டு உடன்படிக்கையாக சுவிஸ் டொச் மொழி பேசப்படும் பகுதிகளில் உள்ள அனைத்து துப்பரவு துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் பொருந்துவதாக அமையும். வேலைசார் கூட்டு உடன்படிக்கையானது (GAV) சகல வேலை பெறுநர்களுக்கும் மிக முக்கியமானது. குறைந்தபட்ச சம்பளம் , விடுமுறை , வேலை நேரம் , மேலதிக பரிந்துரைப்புகள் இதில் அடக்கப்பட்டுள்ளது. வேலைபெறுநர் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்துவதை விட தொழிற்சங்கமாக ஒன்றுகூடி சிறந்த வேலை நிபந்தனைகளை பெற்றுக்கொள்வது சிறந்தது.

## நாம் ஏற்கனவே சிறந்த சலுகைகளை பெற்றுள்ளோம். எனினும் தொடர்ந்து போராடுவோம் !

முதன் முதலாக 2004ம் ஆண்டில் துப்பரவு துறைக்காக வேலைசார் கூட்டு உடன்படிக்கை (GAV) அமுல்படுத்தப்பட்டதிலிருந்து இதுவரை அதிகபட்ச சம்பளம் 35% ஏற்றம் கண்டுள்ளது. Unia இதனை மேலும் விருத்தி செய்ய தொடர்ந்து பணியாற்றும். உங்களது இப்பணி மிகவும் கடுமையானது மட்டுமல்ல ஒட்டுமொத்த சமூகத்திற்கும் முக்கியமான அர்ப்பணிப்பு. அதன் பலன் உங்களுக்கான ஊதியம். நீங்கள் உயர்ந்த பட்ச ஊதியத்தையும் , மேலதிக மரியாதையையும் உங்களது பணிக்காக பெற்றுக்கொள்கிறீர்கள்.

அதற்காக நீங்கள் தேவைப்படுகின்றீர்கள். அதிகளவான Unia அங்கத்தவர்களாக நீங்கள் இணையும் பட்சத்தில் , உங்களது சம்பள உயர்வையும் , GAV உடன்படிக்கையையும் நாம் முன்னோக்கி நகர்த்தி எமது இலக்கை அடையலாம்.

# புதிய சம்பள அட்டவணை

| அதிக உயர்ந்தபட்ச சம்பளம் | 2023ல் இருந்து | 2024ல் இருந்து |
|---|---|---|
| சாதாரண துப்பரவாக்கல் வேலை I | 20.20 | 20.80 |
| சாதாரண துப்பரவாக்கல் வேலை II | 21.20 | 21.80 |
| விசேட துப்பரவாக்கல் வேலை I | 22.30 | 22.70 |
| விசேட துப்பரவாக்கல் வேலை II | 23.30 | 23.70 |
| வைத்தியசாலை துப்பரவாக்கல் வேலை I | 20.80 | 21.20 |
| வைத்தியசாலை துப்பரவாக்கல் வேலை II | 21.80 | 22.20 |
| வாகன சுத்திகரிப்பு துப்பரவாக்கல் வேலை I | 22.10 | 22.50 |
| வாகன சுத்திகரிப்பு துப்பரவாக்கல் வேலை II | 23.10 | 23.50 |
| குறைந்தபட்ச சம்பளம் EBA | 22.00 | 22.00 |
| குறைந்தபட்ச சம்பளம் EFZ | 24.75 | 24.75 |

துப்பரவு துறைக்கான குறைந்தபட்ச சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. ஒட்டு மொத்த டொச்மொழி பேசும் பகுதிகளில் உங்கள் சம்பளம் இவ் அட்டவணையின்படி வழங்கப்படல் வேண்டும். புதிதாக முதியோர் இல்லங்களில் பணிபுரியும் துப்பரவுப்பணியாளர்களும் “வைத்தியசாலை துப்பரவாக்கல் வேலை” என்ற அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள்.

## அதிகளவிலான பரிசோதனை

துப்பரவுப்பணியில் சம்பள ஏற்றத்தாழ்வுகள் பரவலாக அதிகரித்துள்ளது. ஆகவே அதிகளவில் வேலை உடன்படிக்கையை பரிசோதனைக்குட்படுத்த Unia தன்னாலான பணியை மேற்கொள்கின்றது. அத்துடன் வேலைதருநர் நேரடியாக சம்பளத்தை கையில் கொடுப்பனவாக வழங்க முடியாது.

உங்களுக்கு GAV உடன்படிக்கையின்படி சட்டதிட்டங்கள் அமையவில்லையா? உடனடியாக Unia விடம் தொடர்புகொள்ளவும். நாம் உங்கள் உரிமைக்காக உதவுவோம்.



# முக்கியமானவை சுருக்கமாக

## இவ்வுடன்படிக்கை (GAV) யாருக்கு பொருந்தும்?

- துப்பரவுப்பணியில் செயலாற்றும் அனைத்து சாதாரண வேலையாட்கள் தொடக்கம் தொழிலாளர் மேற்பார்வையாளர்கள் (Vorarbeiter/-in) இவ்மேற்பார்வையாளர்களை நிர்வகிக்கும் தலைமையாளர்கள் (Objektleiter/-in) வரைக்கும். அத்துடன் 5 பணியாளர்களுக்கு மேல் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும்.
- ஐந்துக்கும் குறைவான பணியாளர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு, ஊதியங்கள், பொது விடுமுறைகள், நோய் மற்றும் மகப்பேறு ஏற்பட்டால் ஊதியத்தைத் தொடர்ந்து செலுத்துதல் போன்ற ஒப்பந்தத்தின் (புயுஏ) சில விதிகள் மட்டுமே பொருந்தும். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், உங்கள் பிராந்தியத்தில் உள்ள ருயெை செயலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.
- இவ்வுடன்படிக்கை (GAV) பகுதிநேர பணியாளர்களுக்கும் பொருந்தும்.
- விடுமுறைகாலங்களில் பணிபுரியும் இளையோர்களுக்கு இவ்வுடன்படிக்கை பொருந்தாது.

## 13வது மாதசம்பளம்

அனைத்து துப்பரவு பணியாளர்களுக்கும் 13வது மாதச்சம்பளம் வழங்கப்படும்.

## வேலைநேரம்

சாதாரணமாக வாரத்திற்கு அதிகபட்சமாக 42 மணித்தியால வேலை. நீங்கள் மேலதிக நேரம் வேலை செய்யும் பட்சத்தில் அடுத்து வரும் புதிய ஆண்டில் 30ம் திகதி சித்திரை மாதத்திற்குள் அதனை சரியீடு செய்ய வேண்டும்.

## விடுமுறை

- 5 வாரங்கள் (25 வேலை நாட்கள்) 20வயது வரைக்கும்
- 4 வாரங்கள் (20 வேலை நாட்கள்) 21வது வயதிலிருந்து.
- 5 வாரங்கள் (25 வேலை நாட்கள்) 50வது வயதிலிருந்து (குறைந்தது 5 வருடம் வேலையாற்றி இருக்கவேண்டும்.)

## விடுமுறை நாட்கள்

8 மாநில விடுமுறை நாட்களும் அத்துடன் 1.ஆவணியும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை நாட்களாகும்

## மகப்பேற்றுக்கால விடுமுறை

குழந்தை பிறந்த நாளிலிருந்து 16 வாரங்கள் மகப்பேற்று விடுமுறை. இக்காலப்பகுதியில் தாய்மாருக்கு சம்பளம் வழங்கப்படும். கடைசி 6 மாத கொடுப்பனவின் சராசரி வருமானம் கணிக்கப்பட்டு , அச்சம்பளத்தின் அடிப்படையில் 80% மகப்பேற்று காலத்தில் ஊதியமாக வழங்கப்படும். சட்டரீதியாக மகப்பேற்றுக்கால ஊதிய உரிமை கிடைக்க தகுதியற்றவர்களுக்கு நாம் மேற்கொண்டுள்ள உடன்படிக்கையின் (GAV) ஊடாக 8 வாரங்களுக்கு 80% சம்பளம் பெற தகுதியுடையவர்களாகின்றீர்கள்.

## சுகவீனமாக உள்ள போது வழங்கப்படும் சம்பளம்

வாரத்திற்கு 12.5 மணித்தியாலங்கள் வேலை செய்கின்றீர்களா? அப்படியாக நீங்கள் வேலை செய்தால் நீங்கள் சுகவீனமுற்ற தருவாயில் உங்களுக்குரிய காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் சுகவீனமான நாட்களுக்குரிய சம்பளம் கடைசியாக பெற்ற சம்பளத்தின் 80மூ என வரையறுக்கப்பட்டிருக்கும். அதாவது உங்களுடைய கடைசி 6 மாதகால சம்பளம் கணக்கில் எடுக்கப்படும். உங்கள் சுகவீன காப்பீட்டு சம்பளம் நீங்கள் சுகவீனமாகி 3வது நாளிலிருந்து குறைந்தது 730 நாட்களுக்கு சம்பளமாக வழங்கப்படும்.

வாரத்திற்கு 12.5 மணித்தியாலங்களுக்கு உட்பட்டு வேலை செய்திருக்கின்றீர்களா?
அப்படியாயின் நீங்கள் சுகவீனமாகும் பட்சத்தில் நீங்கள் வேலை தொடங்கிய முதலாவது வருடத்திற்கு 3 வாரங்களுக்கு மட்டுமே சுகவீன காப்பீட்டு சம்பளம் வழங்கப்படும். நீங்கள் தொடர்ச்சியாக பல வருடங்கள் பணியாற்றியிருந்தால், அதற்கேற்ப காலம் நீடித்து பணம் வழங்கப்படும். இக்கால நீடிப்பு மாநில அடிப்படையில் நிர்ணயிக்கப்படும்.

ஆகவே உங்களுக்கு சுகவீனம் ஏற்படும் தருவாயில் எவ்வளவு சம்பளம் , எந்த காலம் வரை வழங்கப்படும் என்பதில் சரியான விளக்கமற்ற தன்மை இருந்தால் உங்கள் அருகே உள்ள பிரதேச Unia அலுவலகத்தை நாடி ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம்.

## போக்குவரத்து நேரங்கள்

வேலைத்தளத்திலிருந்து உங்களுக்கு தரப்பட்ட வேலை இடம்வரை செல்வதற்கு செலவிடும் போக்குவரத்து நேரம் வேலைநேரமாக கணிக்கப்படும். உங்களது வேலைத்தளம் தரும் உத்தரவின்படி , நீங்கள் உங்கள் வேலைத்தளத்திலிருந்தோ அல்லது நிறுவன நடவடிக்கை தளத்திலிருந்தோ புறப்பட்டு உங்கள் வாடிக்கையாளரின் இடத்தை அடைதல் மட்டும் சம்பளம் வழங்கப்படவேண்டும். (வேலைநேரம், பயணச்செலவு) நீங்கள் வதியும் இடத்தில் இருந்து வழமையான வேலைத்தளத்திற்குரிய போக்குவரத்துச் செலவு வழங்கப்படமாட்டாது.

## மதிய உணவு

ஒரு நாளைக்கு குறைந்தது 6 மணித்தியாலங்கள் வேலை செய்திருக்கின்றீர்களா? அதேவேளை வழமையான வேலைத்தளம் தவிர்ந்த வேறு இடத்தில் மதிய உணவு உண்கிறீர்களா? அப்படியாயின் உங்கள் வேலைத்தளம் மதிய உணவு தொகையாக 16/= Fr. செலுத்த வேண்டும்.

## வேலைச்சீருடை

வேலைக்குரிய சீருடை வேலைதருநரால் வழங்கப்படும். ஆடையை கழுவுதல் , சீர்திருத்தம் செய்தல் வேலையாட்களின் கடமையாகும்.

## சேவைக்கால வெகுமதி

10 வருடத்தை பூர்த்தி செய்தவர்கள், அதற்கு பிற்பாடு வரும் ஒவ்வொரு 5 வருடத்தையும் பூர்த்தி செய்தவர்கள் மாதச்சம்பளத்தின் கால்பங்கை வெகுமதியாக பெற தகுதியுள்ளவர்களாகிறார்கள்.